O.S. No: 87/2015

பெயர் : ராஜலெட்சுமி

**வா.சா.1**

14-08-2024

**6 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

(6 ஆம் பிரதிவாதி தான் வழக்கறிஞர் என்றும் , தானே சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய விரும்புவதாகவும் தெரிவித்து நீதிமன்ற அனுமதியின் பேரில் 6 ஆம் பிரதிவாதியே சாட்சியை குறுக்கு விசாரணை செய்கிறார்.)

எனக்கு 1975 இல் திருமணம் நடைபெற்றது . எனக்கு தற்போது வயது 66, நான் விவசாயம் தான் செய்கிறேன் . என் கணவர் தற்போது உடல் நிலை சரியில்லாததால் வேலை பார்க்கவில்லை . எங்கள் குடும்ப மாத வருமானம் ரூபாய் 50,000/-. நீதிமன்றத்தில் பொய் சாட்சியமளித்தால் அது தண்டனைக்குரிய குற்றம் என்று தெரியும். சேது லட்சுமிக்கு 1974 இல் திருமணம் நடைபெற்றது. கல்லூரியில் பேராசிரியராக வேலை பார்த்து பணி ஓய்வு பெற்றுவிட்டார் . சேது லட்சுமி சென்னை கார்பிரேசன் பள்ளியில் தலைமை ஆசிரியராக வேலை பார்த்து ஓய்வு பெற்றுவிட்டார். 3 ஆம் வாதிக்கு திருமணம் 1983, 1984 என்று ஞாபகமில்லை . கணவர் அரசு மருத்துவராக இருந்து பணி ஓய்வு பெற்றுவிட்டார் . சென்னை, சுவாமிமலை மற்றும் அளவந்தியபுரத்தில் சொத்துக்கள் எனக்கு எவ்வளவு உள்ளது என்றால் சென்னையில் ஒரு வீடு உள்ளது . ஜோதி தியேட்டரில் பங்கு உள்ளது . சுவாமிமலையில் என் வீட்டுக்காரருக்கு 29 செண்ட் பதிவான நிலம் உள்ளது . அளவந்தியபுரத்தில் 15 ஏக்கர் நஞ்சை நிலம் உள்ளது . என் பெயரில் 200 குழி, வீட்டுக்காரர் பெயரில் ஒரு 60 சென்ட் உள்ளது. என் மகன் பெயரில் ஒரு 215 குழி உள்ளது. என் பெயரிலும் என் கணவர் பெயரிலும் என் மகன் பெயரிலும் உள்ள சொத்துக்களை நான் இந்த வழக்கில் சேர்த்தேனா என்றால் அது என் கணவரால் சம்பாதித்த சொத்து என்பதால் நான் இந்த வழக்கில் சேர்க்கவில்லை . 2, 3 வாதிகள் பெயரில் மற்றும் அவர்கள் வாரிசுகள் பெயரில் உள்ள சொத்துக்களை இந்த வழக்கில் சேர்த்தேனா என்றால் அது அவர்கள் சுயமாக சேர்த்த சொத்தாகும் . இந்த வழக்கில் 1 முதல் 6 பிரதிவாதிகள் பெயரில் உள்ள அனைத்து சொத்துக்களும் சேர்க்கப்பட்டுள்ளதா என்றால் பூர்வீக சொத்துக்கள் மற்றும் அதன் வருமானத்தில் இருந்து வாங்கப்பட்ட சொத்துக்கள் மட்டும் சேர்க்கப்பட்டுள்ளது . கூட்டுக்குடும்பமாக அனுபவத்து வந்த சொத்துக்களை மட்டும் தான் நான் வழக்கில்

சேர்த்துள்ளேன். நாகராஜ படையாச்சியால் என் பெயரில் என் மகன் பெயரிலும் எழுதப்பட்ட சொத்துக்கள் இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளதா என்றால் என் பெயரில் எந்த சொத்தும் என் அப்பா எழுதிவைக்கவில்லை . என் மகன் பெயரில் உயில் எழுதி வைத்ததாக சொல்லும் ஆவணத்தை என்னால் ஏற்க முடியாது . நாகராஜ படையாச்சியால் 2 , 3 வாதிகள் பெயரில் எழுதி வைத்த சொத்துக்கள் சேர்க்கப்பட்டதா என்றால் அவர்கள் பெயரில் என் அப்பா எந்த சொத்தும் எழுதி வைக்கவில்லை. 3 ஆம் வாதியின் மகனுக்கு உயிலில் சொத்துக்கள் கொடுப்பதாக சொல்கிறார்கள். உயில் என் அப்பா எழுதி கொடுக்கவில்லை என்பது தான் எங்கள் நிலைபாடு. நாகராஜ படையாச்சி எழுதி வைத்ததாக என்னால் குறியீடு செய்யப்பட்ட உயிலை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன் . அந்த உயில் 10/05/2012 அன்று சாட்சிகள் முன்னிலையில் எழுதப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு அதில் உள்ளது . ஆனால் சாட்சிகள் முன்னிலையில் எழுதப்பட்டதா என்று தெரியாது. அந்த உயில் பதிவு செய்யப்பட்ட உயில் என்றால் சரி . அந்த உயிலை நாகராஜ படையாச்சி பத்திர பதிவு அலுவலகத்திற்கு நேரடியாக சென்று சாட்சிகள் முன்பாக டெப்பாசிட் செய்துள்ளார் என்றால் அந்த உயிலை நான் நம்பவில்லை . நாகராஜ படையாச்சி 29/07/2014 இல் இறந்தார். நாகராஜ படையாச்சி எழுதி வைத்த உயிலின் அடிப்படையில் அவரவர் சொத்துக்களை பிரதிவாதிகள் அடைந்து பட்டா மாற்றம் செய்து , அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரி . கும்பகோணம் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் உயிலை திறந்து படிக்கும் போது , நானும், மற்ற வாதிகள், பிரதிவாதிகளும் உடன் இருந்தோம் என்றால் ஆமாம் . நான் என்னுடைய பிராது பாரா 6 இல் உயில் எழுத என் தகப்பனார் நிர்பந்த படுத்தப்பட்டதாக சொல்லியுள்ளேன் . அதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் என் தகப்பனாருக்கு அப்பொழுது உடல் நிலை மற்றும் மனநிலை அந்தளவிற்கு சரியாக இல்லை. அது நிரூபிப்பதற்கு என்னிடம் ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. உயில் எழுதும் நல்ல நிலையில் நாகராஜ படையாச்சி , நல்ல நிலையில் இல்லை என்று சொல்வதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.33 உயிலை தான் நாகராஜ படையாச்சி நல்ல மனநிலையில் எழுதவில்லை என்று நான் சொல்கிறேன் என்றால் ஆமாம் . இந்த உயில் எழுதப்பட்டு இரண்டு வருடங்களுக்கு பின்பு தான் நாகராஜ படையாச்சி இறந்தார் என்றால் ஆமாம் . நாகராஜ படையாச்சி எழுதிவைத்த உயில் செல்லாது என்று அறிவிக்க கோரி நான் வழக்கு ஏதேனும் போட்டேனா என்றால் இல்லை . இந்த

பாகப்பிரிவினை வழக்கிலாவது உயில் செல்லாது என்ற பரிகாரம் கேட்டிருக்கிறேனா என்றால் இல்லை . என் பிராதிலும் முதல் விசாரணை சாட்சியத்திலும் 1 முதல் 6 பிரதிவதிகள் தங்கள்பெயரில் கிரய வாங்கிய சொத்துக்களில் தனிப்பட்ட உரிமை எதுவும் கொண்டாட முடியாது அவர்களுக்கு தனிப்பட்ட முறையில் எவ்வித வருமானமும் இல்லை. அவர்களும் விவசாயத்தில் இருந்து கிடைத்த தொகையை கொண்டு தான் அவர்கள் பெயரில் சொத்துக்கள் வாங்கியுள்ளார்கள் என்று நான் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம் . 6 ஆம் பிரதிவாதி என்ன தொழில் செய்கிறார் என்று என் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அவர் தற்போது வழக்கறிஞராக இருக்கிறார். 6 ஆம் பிரதிவாதி சென்னையில் உள்ள என் வீட்டில் தங்கி தான் சட்டம் படித்தார் என்றால் ஆமாம் . அவர் 1998 இல் வழக்கறிஞராக தொழில் செய்ய ஆரம்பித்துவிட்டார் என்றால் சரி . அவர் எந்த வருடத்தில் இருந்து அரசு சிறப்பு குற்றவியல் வழக்கறிஞராக இருந்து வருகிறார் என்று தெரியாது . 6 ஆம் பிரதிவாதியின் வருமானம் மற்றும் அவர் வாங்கியுள்ள சொத்துக்கள் விவரம் தெரியாது. 6 ஆம் பிரதிவாதி வழக்கிற்கு பின்னர் வாங்கிய சொத்துக்களையும் நான் சேர்த்திருக்கிறேன் என்றால் பூர்வீக வருமானத்தில் இருந்து வாங்கிய சொத்துக்களை தான் நான் சேர்த்திருக்கிறேன் . வா.சா.ஆ. 33 உயிலில் நாகராஜ படையாச்சி சேதுலட்சுமிக்கு 1967 இல் சர்வே எண் 115/5 ஏ என்ற நிலத்தை எழுதி வைத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது என் தாய் வழி தாத்தா கார்டியன் முறையில் சேதுலட்சுமிக்கு எழுதி வைத்த சொத்து. அந்த சொத்தை 2 ஆம் வாதி, 6 ஆம் பிரதிவாதிக்கு கடந்த வருடம் செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் 9 லட்சம் பணம் கொடுத்து தான் செட்டில்மெண்ட் எழுதப்பட்டுள்ளது . ஸ்டாம்ப் டூட்டி கட்டாமல் இருப்பதற்காக செட்டில்மெண்ட் என்று எழுதப்பட்டுள்ளது . 9 லட்சம் கொடுத்து கிரையம் வாங்கும் அளவிற்கு 6 ஆம் பிரதிவாதிக்கு வருமானம் உள்ளது என்றால் சரி. பிராதிலும் என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலும் 6 ஆம் பிரதிவாதி 19/09/2014 அன்று ஒரு சொத்தை வாங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது . அதற்கான ஆவணம் குறியீடு செய்யப்படவில்லை என்றால் சரி . 1950 இல் சீனன் படையாச்சி குமாரர்கள் நடேச படையாச்சி , பக்கிரிசாமி படையாச்சி , ராமசாமி படையாச்சி ஆகியோர்களுக்கு இடையே பாகப்பிரிவினை நடந்ததன் மூலம் சொத்துக்கள் பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரி. அதில் நடேச படையாச்சிக்கு என்ன என்ன சொத்துக்கள் பாகத்தில் கிடைத்தது என்று என்னுடைய பிராதில் குறிப்பிட்டு

சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன் . அவ்வாறு நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல . நடேச படையாச்சி அவர் தனக்கு பாகத்தில் கிடைத்த சொத்து மற்றும் சுயமாக சம்பாதித்த சொத்துக்களை உயிலில் எழுதியுள்ளார் என்றால் தவறு . பாகத்தில் கிடைத்த சொத்து மற்றும் அதன் வருமானம் மூலம் வாங்கிய சொத்துக்கள் உயிலில் காண்பிக்கப்பட்டுள்ளது . என்னால் குறியீடு செய்யப்பட்ட உயிலில் நடேச படையாச்சி தன்னால் சுயமாக சம்பாதிக்கப்பட்ட சொத்துக்களையும் உயிலில் காண்பிக்கப்பட்டுள்ளதாக சொல்லி உள்ளாரா என்றால் ஆமாம். நடேச படையாச்சி சுயமாக சம்பாதித்த சொத்துக்களை உயிலில் எழுதி வைக்க அவருக்கு உரிமை இருக்கா என்றால் அனைவருக்கும் தெரியும் வண்ணம் அவர் எழுதி வைத்ததில் எனக்கு ஆட்சேபனை இல்லை . நடேச படையாச்சி எழுதி வைத்த உயிலில் தன் மகன் நாகராஜ படையாச்சி தன் சுய உழைப்பினால் பல்வேறு சொத்துக்களை வாங்கியுள்ளதாக குறிப்பிட்டு சில சொத்துக்கள் விவரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி . அவை நாகராஜ படையாச்சியால் கூட்டுக்குடும்ப சொத்தின் வருமானத்தில் இருந்து தான் வாங்கப்பட்டது. நடேச படையாச்சி உடன் ஒன்றாக தான் நாகராஜ படையாச்சியும் வாழ்ந்த போது தான் வாங்கினார் . நடேச படையாச்சி தன்னுடைய ஒரே மகனான நகராஜ படையாச்சிக்கும், ஒரே மகளான தையல் நாயகிக்கும் பிரித்து கொடுத்து விட்டார் என்றால் ஆமாம் . தையல் நாயகிக்கு கொடுக்கப்பட்ட பி செட்டியூல் சொத்துக்களை நான் இந்த வழக்கில் சேர்த்துள்ளேனா என்றால் இல்லை . நடேச படையாச்சி 1967 இல் இறந்தார் . நான் தாக்கல் செய்த எந்த ஆவணத்தில் ஆவது பூர்வீக சொத்தில் கிடைத்த வருமானத்தில் இருந்து இந்த சொத்துக்கள் வாங்கப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை . ஆனால், அவ்வாறு பூர்வீக வருமானத்தில் இருந்து தான் வாங்கப்பட்டது. பிரதிவாதிகள் வாங்கிய கிரைய பத்திரத்தில் நாகராஜ படையாச்சி கொடுத்த பணத்தில் இருந்து தான் கிரையம் பெறப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறு குறிப்பு இல்லை . பிரதிவாதிகள் பெயரில் வாங்கப்பட்ட ஆவணங்களை ரத்து செய்ய கோரி நான் பரிகாரம் கோரவில்லை. நாகராஜ படையாச்சி உயிருடன் இருக்கும் போது அவர் மீது நான் வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் பிரபாகரன் அடைமானம் வாங்கயிருந்த சொத்தை நான் கிரயம் வாங்கி அடமானத்தொகையை செலுத்துவதற்கு முன் பிரபாகரன் இறந்துவிட்ட படியால் பிரபாகரனின் வாரிசு முறையில் அவருடைய மனைவி, மகன், என் தகப்பனாரை சேர்த்து வழக்கு தாக்கல் செய்தேன் . அந்த

வழக்கை நான் தாக்கல் செய்த போது நாகராஜ படையாச்சி நல்ல நிலையில் இருந்தாரா என்றால் அப்பொழுது உடல் சரியாக இல்லை . நடமாட்டம் இல்லை. முதல் பிரதிவாதியின் மகளை தான் என் மகனுக்கு திருமணம் செய்திருக்கிறேன் . நடேச படையாச்சி மூலம் கிடைத்த சொத்தில் தான் முதல் பிரதிவாதி வீடு கட்டி வசித்து வருகிறார் என்றால் ஆமாம் . முதல் பிரதிவாதியின் அனைத்து சொத்துக்களையும் வாக்கில் சேர்த்திருக்கிறேனா என்றால் சேர்த்திருக்கிறேன் . முதல் பிரதிவாதி தனது சொத்தை 7 ஆம் பிரதிவாதியின் கணவர் அசோக்கிற்கு விற்றார் என்றால் தெரியாது. முதல் பிரதிவாதி 7 ஆம் பிரதிவாதியின் கணவருக்கு விற்ற சொத்து பூர்வீக சொத்தா என்றால் தெரியாது . நாகராஜ படையாச்சி பல வருடங்களாக கள்ளுக் கடை நடத்தி வந்தார் என்றால் நாகராஜ படையாச்சி நடத்தவில்லை. முதல் பிரதிவாதி சுவாமி நாதன் நடத்தி வந்தார் . ராஜன் ரைஸ்மில் என்ற ரைஸ் மில்லையும் நாகராஜ படையாச்சி நடத்தி வந்தார் என்றால் அவர் நடத்தவில்லை. சுவாமி நாதன் தான் நடத்தி வந்தார் . நாகராஜன் தனது உயிலில் ரைஸ் மில்லை தன் மகன் சிவக்குமார் பல வருடங்களாக நடத்தி வருகிறார் என்று சொல்லியுள்ளார் என்றால் அது பொய் . ராஜன் மர அறுவை மில் (சா மில்) நாகராஜ படையாச்சி நடத்தி வந்தார் என்றால் 2 ஆம் பிரதிவாதி சிவராமகிருஷ்ணன் தான் நடத்தி வந்தார் . கங்காத புரத்தில் ராஜராஜ டாக்கிஸ் என்ற பெயரில் நாகராஜ படையாச்சி சினிமா கொட்டகை நடத்தினாரா என்றால் தனிப்பட்ட முறையில் நடத்தவில்லை. பங்குதாரராக நடத்தினார். அளவந்தியபுரத்தில் லெட்சுமி டாக்கிஸ் என்ற பெயரில் ஒரு சினிமா கொட்டகை நடத்தினாரா என்றால் இல்லை . இதை தவிர வேறு சில டெண்ட்டு கொட்டைகைகளிலும் நாகராஜ படையாச்சி பங்குதாராக இருந்தார் என்றால் ஆமாம் . என் தாயார் சுந்தாரம்பாள் 1966 இல் இறந்தார் . சுந்தாரம்பாளின் தகப்பனார் ரத்தன படையாச்சியின் சொத்துக்களுக்கு யார் யார் வாரிசுகள் என்றால் அவருடைய மீனாம்பாள் , மகள்கள் சுந்தராம்பாள், கமலாம்பாள். சுநதரம்பாளுக்கு சேரவேண்டிய சொத்தில் நாகராஜ படையாச்சிக்கும் பங்கு உண்டு என்றால் சுந்தராம்பாளுக்கு தகப்பனார் மூலம் கிடைத்த சொத்துக்களில் நாகராஜ படையச்சிக்கு பங்கு இல்லை . சுந்தராம்பாளில் சொத்துக்களை விற்கும் போது நாகராஜ படையாச்சிக்கு ஏதேனும் பங்கு கொடுத்தோமா என்றால் இல்லை. நாகராஜ படையாச்சி அதில் பங்கு கேட்கவில்லை . விடுதலை பத்திரம் எதுவும் எழுதி கொடுக்கவில்லை. நாகராஜ படையாச்சி எந்த கட்சியில் என்ன பதவியில் இருந்தார் என்றால் காங்கரஸ் கட்சியில் தஞ்சை மாவட்ட துணை தலைவராக இருந்தார்

என்றால் தெரியாது . அவர் அளவந்தியபுரம் ஊராட்சி மன்ற தலைவராக பல ஆண்டுகள் இருந்தார் என்றால் சரி . என் கணவரின் ஊர் சென்னை . சென்னையில் ஜோதி தியேட்டரில் பங்குதாரரான என் கணவருக்கு மாதம் ரூபாய் 50000/- வருமானம் வருகிறது . எனக்கு சென்னையில் பரங்கிமலையில் ஒரு பங்களா வீடும், ஆலந்தூர் சன்னியாசி சுபேதா தெருவில் ஒரு வீடும் , ஆளந்தூர் எம்.கே. ரோட்டில் ஒரு கமர்சியல் காம்ப்ளக்ஸ் உள்ளது என்றால் பரங்கிமலை வீடு என் பெயரில் உள்ளது. மற்றவை என் கணவர் பெயரில் பங்குக்கு உள்ளது. 2011 ஆம் ஆண்டு நடந்த அளவந்தியபுரம் ஊராட்சி மன்ற தேர்தலில் போட்டியிட்ட 8 ஆம் பிரதிவாதிக்கு எதிராக போட்டியிட்டவர்க்கு நான் ஆதரவாக இருந்தேன் என்றால் ஆமாம். 4 ஆம் பிரதிவாதி பெயரில் நான் பல புகார் காவல் நிலையத்தில் கொடுத்திருக்கிறேன் என்றால் நானும் கொடுத்திருக்கிறேன் . அவரும் கொடுத்திருக்கிறார். கூட்டுக்குடும்பம் என் வாதத்தின் படி எவ்வளவு நான் என்றால் என் தகப்பனார் இறக்கும் வரை இருந்தது . கூட்டுக்குடும்பத்தில் வாதிகளாக நாங்களும் ஒரு அங்கமாக இருந்தோமா என்றால் ஆமாம் . வாதிகள் மற்றும் அவர்களுடைய வாரிசுகளின் சொத்துக்களும் இதில் சேருமா என்றால் சேராது.

**6 ஆம் பிரதிவாதி வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.